**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 2/2026**
**PW. 1**
**Date: 10.03.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.கிருஷ்ணமூர்த்தி | வயது | 26 |
| கணவர்/தந்தை பெயர் | அலெக்டாண்சர் | தொழில் | – |
| கிராமம் | படுர் | வட்டம் | திருப்போரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **10th March 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

2 ஆம் எதிரி ஆஜர். 1 ஆம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 பா.நி.சு.ச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிகப்படுகிறது.

**<u>முதல் விசாரணை :</u>**

1. நான் லாண்டிரியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு 10.00 மணியளவில் கழிப்பட்டூரில் உள்ள ஒரு ஹோட்டலில் சாப்பிட சென்றபோது அங்கு ஹோட்டல் வைத்திருந்தவர்களுடன் வாக்குவாதம் ஏற்பட்டது. ஆஜர் 1 ஆம் எதிரி அவர் தான். என்னுடன் எனது நண்பர் கௌதம் என்பவரும் உடன் வந்தார். சஞ்சய் கோகுலம் வந்தார்கள். வாக்குவாதம் முடிந்த பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். பாதுகாப்பிற்காக புகார் கொடுத்தோம். தற்போது

என்னிடம் காட்டப்படும் ஆவணம் **(புகார்)** உள்ள கையொப்பம் என்னுடைய தான். அதில் எழுதப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியும் அந்த புகார் நான் கொடுத்தது தான். (**26/11/2025 தேதியிட்ட புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார்என்னை விசாரணை செய்தார்கள்.

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணையில் கேட்கப்படும் கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படுகிறது.**

2. கடந்த 25/11/2025 அன்று இரவு 10.15 மணியளவில் நானும் என்னுடைய நண்பர்களும் எஸ்.கே.எஸ் டிபன் கடையில் சாப்பிட சென்றபோது ஆஜர் எதிரியும் அவரிடம் இருந்த ஓட்டல் மாஸ்டரும் என்னை ஆபாசமாக திட்டினார்கள் என்றால் இல்லை. வாக்குவாதம் தான் ஏற்பட்டது. அவர்கள் இருவரும் என்னை தலையில் தாக்கினார்கள் என்றால் இல்லை. அதனால் எனக்கு கொடுங்காயம் ஏற்பட்டு நான் சுப்ரீம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக நான்தான் கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் மறுநாள் புகார் கொடுத்தேன் என்றால் பாதுகாப்பிற்காக புகார் கொடுத்தேன். நான் என்னை தாக்கியவர்களுடன் சமாதானமாக சென்று விட்டதால் தற்போது அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை**

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI
Date: 2026.03.10 19:01:42 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.